செ.வெ.எண்: 33 நாள்:13.04.2022

**மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.எஸ்.வினீத் இ.ஆ.ப., அவர்களின் செய்திக்குறிப்பு!!!**

திருப்பூர் மாவட்ட வருவாய் அலகில், காலியாக உள்ள அலுவலக உதவியாளர் பதவிக்கான காலிப்பணியிடங்கள் அரசாணை நிலை எண் 44 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு(T2) துறை நாள் 11.03.2015-ன்படி மாவட்ட வேலைவாய்ப்பகம் மூலம் பட்டியல் பெற்றும், தகுதியுள்ள நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டும், நேர்காணல் மூலம் நேரடி நியமனமுறையில் நிரப்பப்பட உள்ளன. எனவே தகுதியுள்ள நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் 15.05.2022 அன்று பிற்பகல் 05.45 மணிக்குள் வரவேற்கப்படுகின்றன.

**1. பணியிட விபரம்**

| வ.எண் | பதவியின் பெயர் | கல்வி தகுதி | காலிப் பணியிடங்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | அலுவலக உதவியாளர் | 8 ஆம் வகுப்பு தேர்ச்சி | 24 |

**2. இனசுழற்சி விபரம்**

| வ. எண். | இன விபரம் | முன்னுரிமை பொது | முன்னுரிமையற்றவர் பொது | முன்னுரிமை பெண்கள் | முன்னுரிமையற்றவர் பெண்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | பொதுப்பிரிவு | 2 | 3 (1 - கண்பார்வை குறைபாடு உள்ளவர்) | 0 | 2 | 7 |
| 2. | தாழ்த்தப்பட்ட வகுப்பினர் | 0 | 2 (1- முன்னாள் இராணுவத்தினர்) | 0 | 1 | 3 |
| 3. | தாழ்த்தப்பட்ட வகுப்பினர் (அருந்ததியர்) | 0 | 1 | 0 | 0 | 1 |
| 4. | பழங்குடியினர் | 1 | 0 | 0 | 0 | 1 |
| 5. | மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர் மரபினர் | 1 | 3 (1- முன்னாள் இராணுவத்தினர்) | 0 | 1 | 5 |
| 6. | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்- (முஸ்லீம் அல்லாதோர்) | 1 | 3 | 0 | 3 | 7 |

**3. வயது வரம்பு (01.07.2021 அன்று) :**

| வ.எண் | விபரம் | குறைந்த பட்ச வயது | அதிகபட்ச வயது |
|---|---|---|---|
| 1. | பொதுப்பிரிவினர் | 18 | 32 |
| 2. | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் | 18 | 34 |
| 3. | தாழ்த்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பழங்குடியினர் | 18 | 37 |
| 4. | ஆதரவற்ற விதவை (அனைத்து பிரிவினருக்கும்) | 18 | 37 |

- அரசு விதிகளின்படி முன்னாள் படைவீரர்களுக்கு வயது வரம்பு 53 வரை தளர்வு உண்டு.
- மாற்றுத் திறனாளிகளுக்கு 10 ஆண்டுகள் உச்ச வயது வரம்பு தளர்வு உண்டு.

**4. நிபந்தனைகள்:**

1 விண்ணப்பதாரர்கள் தங்களின் சுயவிவரங்கள் மற்றும் இதர விபரங்கள் ஆகியவற்றினை குறிப்பிட்டு முழுமையான வடிவத்தில் www.tiruppur.nic.in என்ற திருப்பூர் மாவட்ட இணையதளத்தில் அளிக்கப்பட்டுள்ள விண்ணப்பத்தினை பதிவிறக்கம் செய்து விண்ணப்பித்தல் வேண்டும்.

2 விண்ணப்பதாரர்கள் தங்களது விண்ணப்பங்களுடன் இணைத்தனுப்பப்படும் கல்வித் தகுதி சான்றிதழ்கள் மற்றும் இதர சான்றுகளின் ஒளி நகலில் (குடும்ப அட்டை நகல், வேலை வாய்ப்பக பதிவு நகல், சாதி சான்று நகல், கல்வி மாற்று சான்று நகல், மதிப்பெண் சான்று நகல்) சுயசான்றொப்பமிட்டு அனுப்ப வேண்டும். உரிய சான்றிதழ்கள் இன்றி பெறப்படும் விண்ணப்பங்கள் பரிசீலனை நிலையிலேயே நிராகரிக்கப்படும்.

3 மாற்றுத் திறனாளி முன்னுரிமை கோருபவராக இருப்பின் மாவட்ட மாற்றுத்திறனாளி நல அலுவலரால் வழங்கப்பட்ட சான்று நகல் இணைத்து விண்ணப்பம் அளிக்க வேண்டும்.

4 விண்ணப்பதாரர்கள் பட்டப்படிப்பில் தேர்ச்சி பெற்றவர்கள் எனில், இப்பதவிக்கு விண்ணப்பித்தல் கூடாது, விண்ணப்பிக்கும் பட்சத்தில் விண்ணப்பங்கள் பரிசீலனை நிலையிலேயே நிராகரிக்கப்படும்.

5 பரிசீலனையில் விண்ணப்பதாரர்கள் அளித்த தகவல்கள் தவறு என கண்டறியப்பட்டால் விண்ணப்பம் தள்ளுபடி செய்யப்படும்.

6 இருசக்கர வாகனம் ஓட்டத் தெரிந்தவராகவும், ஓட்டுநர் உரிமம் பெற்றவராகவும் இருக்க வேண்டும். (கட்டாயமல்ல).

7 விண்ணப்பங்களை 15.05.2022 அன்று மாலை 05.45 மணிக்குள் பதிவஞ்சல் / விரைவுதபால் மூலமாக கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பிடல் வேண்டும். குறிப்பிட்ட காலக் கெடுவிற்கு பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.

**மாவட்ட ஆட்சியர்,**<br>**வருவாய் துறை (அ-பிரிவு)**<br>**அறை எண்.224, இரண்டாம் தளம்,**<br>**மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,**<br>**பல்லடம் ரோடு,**<br>**திருப்பூர் - 641 604.**

8 அஞ்சல் தாமதங்களுக்கு நிர்வாகம் பொறுப்பு ஏற்காது.
9. தகுதியில்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
10. எந்த ஒரு விண்ணப்பத்தையும் நிராகரிக்கும் அதிகாரம் நிர்வாகத்திற்கு உண்டு.
11. நேர்காணல் அழைப்புக் கடிதம் பெறுவது மட்டும் வேலைக்கான உத்தரவு என்று கருதக்கூடாது.
12. நேர்காணல் செய்யும் நாள், நேரம் மாறுதலுக்குட்பட்டது.
13. எவ்வித சிபாரிசுகளும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
14. திருப்பூர் மாவட்டத்தில் வசிப்பவராக இருக்க வேண்டும்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம்.**

**அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள:**

PRO Tiruppur @PRO_Tiruppur @Protiruppur Tiruppur District Administration tiruppur.nic.in

<u>வருவாய்த்துறை</u>

<u>அலுவலக உதவியாளர் பணியிடத்திற்கான விண்ணப்பம்</u>

அனுப்புதல்

பாஸ்போர்ட் அளவு புகைப்படம்

பெறுதல்

மாவட்ட ஆட்சித் தலைவர்,
திருப்பூர்.

ஐயா,

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் .................................. வகுப்பைச் சார்ந்த ....................................................................... என்னும் சாதியை சார்ந்தவர். நான் ........................................... வரை படித்துள்ளேன். திருப்பூர் மாவட்ட வருவாய் அலகில் காலியாகவுள்ள அலுவலக உதவியாளர் பணியிடத்தில் பணிபுரிய எனக்கு பணி நியமனம் வழங்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். எனது சுய விவரங்கள் பின்வருமாறு,

1. பெயர் :

2. தகப்பனார் பெயர் :

3. கணவர் பெயர் :

4. பாலினம் (ஆண் / பெண்) :

5. பிறந்த தேதி / 01.07.2022-ல் வயது :

6. முழு அஞ்சல் முகவரி (அஞ்சல் குறியீட்டு எண்ணுடன்) :

7. கல்வித் தகுதி :

8. வகுப்பு / சாதி (சாதியின் உட்பிரிவு :
குறிப்பிடப்பட வேண்டும்)

9. முன்னுரிமை விவரம்

அ) ஆதரவற்ற விதவையா? :

ஆ) முன்னாள் இராணுவத்தினரா? :

இ) மாற்றுத் திறனாளியா? :

ஈ) கலப்பு திருமணம் புரிந்தவரா? :

| | | |
|---|---|---|
| 10. வேலை வாய்ப்பு பதிவு விவரம் (இருப்பின் அட்டை நகல் இணைக்கவும்) | பதிவு எண் | வருடம் |

11. குடும்ப அட்டை எண்
(நகல் இணைக்கவும்)

**(5 முதல் 11 வரை உள்ள இனங்களுக்கு ஆவணங்கள் / சான்றுகளின் நகல்கள் இணைக்கப்பட வேண்டும்.)**

மேலே என்னால் கூறப்பட்ட விவரங்கள் அனைத்தும் உண்மை என உறுதி அளிக்கிறேன். இதில் ஏதேனும் தவறுகள் இருப்பது தெரியவந்தால் எவ்வித விசாரணையும் இன்றி எனது விண்ணப்பம் நிராகரிக்கப்படும் என்பதை நன்கு அறிவேன் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். இதனுடன் உரிய ஆவணங்களின் நகல்களை இணைத்துள்ளேன்.

இடம் : விண்ணப்பதாரர் கையொப்பம்

நாள் :